[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 மே 14

நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஏன் 6 ஆண்டுகள் வரையிலே அதற்கான நடவடிக்கைகளை மக்களுக்கு நன்மை கொடுக்கின்ற விதத்திலே அந்தக் கனக்ஷன்கள் கொடுக்கப்பட வில்லை, என்பது புதிராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் புதிதாக தண்ணீர் சப்ளை கொடுக்கின்ற போது ஏற்கனவே இருக்கக்கூடிய கிணற்றை நல்ல முறையிலே ஆழப்படுத்தி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி யிலே நல்ல முறையிலே நீர் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள் கிறேன். அது மட்டுமல்ல. இந்த வேலையை ஒரு மாதத்திற் குள்ளாக முடிப்பேன் என்று அறிக்கையில் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அந்த காலத் தாமதத்திற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் முக்கியமாகச் செய்ய வேண்டிய மீஞ்சூருள்ள 10 குழாய்கள் மேடான பகுதியில் உள்ள தால் தண்ணீர் அழுத்தக் குறைவினால் குடிநீர் வரவில்லை என்று தெரிகிறது. எனவே அதன் மூலமாகக் குடிநீர் வருவதைத் தான் இப்போது அவசரமாகச் செய்யவேண்டும். இந்த வேலை களை எல்லாம் செய்து முடித்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் மேலும் தண்ணீர் வருவதற்கு வசதியாக, வாய்ப்பு இருக்கக் கூடிய ஆலோசனை சொல்வார்களானால் அது பரிசீலனை செய்யப்படும்.

[முற்பகல் 11-00]

இ: கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழ்கப் பேருந்து விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளானது குறித்துத் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, 1-5-1981 அன்று கும்பகோணம் அருகே சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளானது குறித்த அவசரப் போது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1981 மே 14]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, நான் பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1-5-81-ந் தேதியன்று கும்பகோணம் கிளை II-ஐச் சார்ந்த சோழன் சாலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து எண். 20 (பேருந்து எண். டி. எம். எண். 4239) அதன் வழித்தடமான கும்பகோணம்—குடவாசல் (வழி) கொருக்கை, வலங்கைமான் வழித்தடத்தில் மாலை 7.35 மணி பயணத்தில் கும்பகோணம் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு குடவாசலுக்குச் சென்று கொண்டிருந்தது. கும்பகோணம் அருகே மாத்தி ரயில்வே கேட்டைக் கடந்து சீரான வேகத்தில் குறுகலான சாலையில் பேருந்து செல்லுகையில், சாலையில் வலது புறத்தில் பூட்டப் படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாட்டுவண்டியின் மீது ஏற்றப்பட்டிருந்த சவுக்குக் கழிகளின் மேல் மோதியுள்ளது. மேற்படி மோதலினால் சவுக்குக் கழிகள் பேருந்தின் முன் பக்க வலது காற்றுத்தடை கண்ணாடியை உடைத்துக்கொண்டு பேருந்தின் ஓட்டுநரையும் இடித்துள்ளது. மேற்படி எதிர்பாராத மோதலினாலும் ஓட்டுநர் அடிபட்டதாலும், ஓட்டுநர் தன் நிலையிழந்து பேருந்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பேருந்தை சாலையின் இடது புறம் திருப்ப முயற்சிக்கையில் பேருந்து சாலையின் இடது புறம் உள்ள வயலில் கவிழ்ந்துவிட்டது. மேற்படி மாட்டுவண்டி சாலையில் முறையாக நிறுத்தப்படாமல் தார் சாலையில் வண்டியின் ஒரு சக்கரமும் வண்டியின் மற்றொரு சக்கரம் மண் சாலையிலும் இருக்கும் வகையில் நிறுத்தப்பட்டிருந்தது. சவுக்குக் கழிகள் ஏற்றப்பட்டிருந்த மாட்டுவண்டி சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததற்கான எச்சரிக்கைக்காக வெளியே நீட்டிக் கொண்டிருந்த சவுக்குகழிகளில் சிகப்புக் கொடியோ அல்லது வேறு எவ்வித சிகப்பு விளக்கு அறிகுறியோ இல்லாமல் இருந்தது. விபத்து நடந்த இடத்தில் தெரு விளக்குகளினால் போதிய வெளிச்சம் இல்லாமல் இருந்துள்ளது. மேற்கூறிய காரணங்களினாலும் விபத்து நடந்த இடத்தில் நிறுத்தி வைத்திருந்த மாட்டு வண்டியைப் பேருந்து ஓட்டுநரால் சரிவர கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தில் மாட்டுவண்டியில் எச்சரிக்கைக்கான அடையாளம் ஏதும் இல்லாத காரணத்தால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

2. மேற்படி விபத்தில் ஓட்டுநர் பலத்த காயமுறவே அவர் அருகிலுள்ள கும்பகோணம் அரசாங்க மருத்துமனைக்கு உடனடி சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டார். ஆனால் மருத்துவமனைக்குச் செல்லுமுன் உயிர் இழந்தார். பேருந்தில் பயணம் செய்த ஒரு நபர் விபத்து நடந்த இடத்திலேயே கவிழ்ந்த பேருந்தினால் நசுக்கப்பட்டு உயிர் நீத்தார். ஆக இவ் விபத்தில் உயிர் இழந்தவர் இருவரே, ஐவர் அல்ல.

விபத்தில் உயிரிழந்த நபர்களின் பெயரும் விலாசமும் :

1. பா. பிச்சுமணி, ஆண், வயது 41.
சி. ஆர். சி. ஓட்டுநர், டி. எம். எண். 4239.
த/பெ பாலசுப்ரமணி.
நெ. 4, கௌதமேஸ்வரம் தெற்குவீதி,
கும்பகோணம்.

2. பொ. செல்வராஜ், ஆண், வயது 26 (பயணி)
த/பெ. பொன்னையன்.
நந்திவனம், மருதாநல்லூர்,
கும்பகோணம்.

மேற்படி விபத்தில் ஆறு பயணிகள் பலத்த காயங்களும், பதினைந்து பயணிகள் சொற்ப காயங்களும் அடைந்துள்ளனர், அவர்கள் சிகிச்சைக்காக கும்பகோணம் அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலத்த காயமுற்ற ஆறு பயணி களும் மேற்கொண்டு சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் நல்லமுறையில் இந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள், அறிக்கை சிறப்பாக இருக்கிறது. நான் இன்னொரு விஷயத்தையும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த டிரைவர் பிச்சுமணி என்பவர் நீண்டநாள் பணியாற்றிவிட்டு இறந்திருக்கிறார். அதைப்போல பயணி ஒருவர் இறந்திருக்கிறார். மேலும் பலர் காயம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க அரசு சிபாரிசு செய் திருக்கிறதா? எவ்வளவு கொடுக்க சிபாரிசு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஓட்டுநரைப் பொறுத்தவரையில் அரசு சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும். குறிப்பாக ஓட்டுநருக்கு 10,000 ரூபாய் என்ற முறையில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இவருடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்படும். ஆனால் பயணியைப் பொறுத்தவரையில் இன்னும் நாம் முடிவு செய்யவில்லை. அவர்களுக்கு நீதிமன்றத்திற்குப் போகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அரசாங்கமோ அல்லது போக்குவரத்துக் கழகமோ முடிவு செய்ய முடியாது. அவர்கள் நீதிமன்றத்தின் மூலம் வாங்கிக்கொள்ள முடியும்.

ஈ. வறட்சியின் காரணமாகக் கால்நடைகள் வெட்டப் படுவது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, ''வறட்சியின் காரணமாகக் கால் நடைகள் வெட்டப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்.